9/12/1951 M.V.M BANGALORE 2

போர்வாள்

வாள் 5 வீச்சு 14

8-12-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

நா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர் :

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

வருணாஸ்ரமத்தால் வாழ்வு வளைந்தது

சர்வாதிகாரம் வேண்டாம்—சமநிலை வேண்டும்

★

அறிவுரைதான்! ஆனால் அரங்கேற வேண்டுமே!

★

கோபாலர் காணவிழையும் காட்சி

(காஞ்சி. கல்யாணசுந்தரன்)

"பெருவாரியான நாட்டுமக்களின் பேராதரவைப் பெற்றவர்களே எப்பொழுதும் மத்திய சர்க்காரில் இருக்க முடியாது. மத்திய சர்க்காரில் பதவிவகிக்கும் முன் யோசனையற்றவர்கள் தவறான முறையில் ராஜ்யங்களை முடுக்குவார்களானால், ஆஸ்ட்ரேலியாவைப் போல் இங்கும் பிரிந்துவிட வேண்டும் என்ற கூச்சல் வலுப்பெற்று விரிவடையும். இதனால், விடா முயற்சியுடன் மெள்ள மெள்ள நாம் கட்டிவரும் தேசீய மாளிகை வன்மை குன்றி ஆட்டம் கொடுத்து முடிவில் தரைமட்டமாகிவிடும்."

—கனம் கோபால்

நாம் சாமானியர்கள்; சாதாரண குடிமக்கள், பதவியிலே அமர்ந்து பயிற்சி பெறாதவர்கள். அதற்கான வாய்ப்பு இருந்தும் கூட, அந்த நிலை இப்பொழுது வேண்டாம் என்று நம்மை நாமே கட்டுப் படுத்திக்கொண்டு இருப்பவர்கள்,

பதவி பெறுவது ஒன்று மட்டுமே நம்முடைய முழுநோக்கமாக இருக்குமானால், தற்சமயம் தானாகவரும் தருணத்தைத் துச்சமென மதித்து, வேறு பயன்தரும் பணியில் ஈடுபட முனைந்திருக்க மாட்டோம். நாமும் தேர்தல் போர்க் களத்திலே புகுந்து வெற்றி பெற முனைவோம். வெற்றியும் நிச்சயமாகப் பெறுவோம்.

வாய்ப்பு இருந்தும், வெற்றி நிச்சயம் என்ற நிலை இருந்தும், நாம், அதற்கு அதிக மதிப்பளிக்காமல், வேறு பணியிலே மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறோம். முற்போக்கு பிற்போக்கு மற்றெல்லாப் போக்கினரின் கருத்தும் தேர்தலிலே தீவிரமாக ஈடுபட்டு இருக்கும்போது, அவர்கள் எழுப்பும் பேரொலி நமது காதுகளில் மட்டும் நுழையாமலாய், நுழைந்தாலும் நமது நோக்கை ஈர்க்காமலும் இருக்கக் காரணம் என்ன? நமது இலட்சியமான திராவிட நாடு பெற, நாம் அதற்கான சூழ்நிலையை

நாட்டில் உண்டாக்கும் பணியில் ஈடுபட்டு இருப்பதே காரணமாகும்.

ஓர் சிறு அளவிலாவது நேரடியாகத் துணை செய்யும் என்று நாம் தவறுதலாக முடிவிற்கு வந்தாலும்கூட, நாம் தேர்தலில் ஈடுபடாமல் விலகிநிற்கமாட்டோம். அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு இச்சூழ் நிலையில் கண்டிப்பாகத் தங்களுக்குக் கிட்டாது என்று திட்ட வட்டமாகத் தெரிந்தும்கூட, முற்போக்குக் கட்சிகள் என்று கூறிக் கொள்ளும் ஒன்றிரண்டு கட்சிகள் தேர்தலில் முழு மூச்சாகக் குதித்துக் கூத்தாடுகின்றன. தேர்தல் வேறு பலனைத் தராவிலையானாலும், இழந்த மக்கள் ஆதரவை மீண்டும் பெறுவதற்கும், மக்கள் ஆதரவைத் தங்கள் கட்சிக்குத் திரட்டுவதற்குமாவது பயன் படட்டுமே என்ற 'சிறந்த' நோக்கத்தோடு, அக்கட்சிகள் இத் தேர்தலின் பலன்களை மிகைப்படுத்திக் கூறவும் செய்யலாம். அக்கட்சிகளைப் பொறுத்த வரையில், அவைகளின் போக்கு நேர்மையானதாகவும் இருக்கலாம். குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் ஆதிக்கப் பரவலுக்காக, நாம் துணை நிற்கவேண்டும் என்பது வெறும் கேலிக்கூத்தாகும். நிற்க,

கனம் கோபால ரெட்டியார் சென்னை ராஜ்ய சர்க்காரின் நிதி அமைச்சராவார். கடந்த ஐந்து ஆண்டுகளாக அமைச்சராக இருந்து அனுபவம் பெற்று இருக்கிறார். மாகாணங்களுக்கு உள்ள அதிகார வரம்புகளையும், நடைமுறையில் ஏற்படும் விளைவுகளையும், நாம் தத்துவ ரீதியாக அறிந்திருக்கிறோம். அதையும் முக்கியமானதோர் ஆதாரமாக வைத்துக்கொண்டு திராவிட நாடு கோரிக்கையை திராவிட மக்கள் முன் வைத்திருக்கிறோம். அதற்கு திராவிட மக்களின் ஒன்றுபட்ட ஆதரவைக் கோரிவருகிறோம். வியக்கத்தக்க முறையில் இத்துறையில் வெற்றியும்பெற்று வருகிறோம்.

இனம், மொழி, கலை, நாட்டு அமைப்பு, பொருளாதாரம் ஆகிய எல்லா அம்சங்களையும் கொண்டு இந்தியாவை ஓர் துணைகண்டம், என்று நாம் தீர்மானித்துத் திராவிடத் தனி நாடு கோரிக்கையைக் கிளப்பி இருக்கிறோம். ஆனால் கோபாலரெட்டியாரோ இவ்வரலாற்று உண்மையைக்காணமறுப்பவர்; இந்தியா ஒரு தேசம், இதில் வசிப்போர் அனைவரும் 'இந்தியர்' என்ற அரசியல்பள்ளியிலேபயின்றவர். இந்திய தேசியம் குடி இருக்க தன் இருதயத்தில் இடமளித்தவர், இன்றும் இடமளித்துக் கொண்டு இருப்பவர்.

அவருக்கு இருப்பது இந்திய தேசிய உள்ளம், அவர் பொது வாழ்வில் புகுந்த காலமுதல் அத்தகு பயிற்சியே பெற்று வந்து இருக்கிறார். அவர் மத்திய சர்க்காரின் போக்கைசந்தேகிக்கிறார். மத்திய சர்க்காருக்குள்ள அதிகார வரம்பைக்கண்டு ஆத்திரப் படுகிறார். மாகாணத்துக்குள்ள கீழ் நிலை கண்டு வேதனைப் படுகிறார். எனவே, அறிவுரை தருகிறார்; உபதேசகாண்டம் வாசிக்கிறார்.

மாகாணத்தின் நிதி அமைச்சராக இருந்து அவர் பெற்று வரும் அனுபவம், மத்திய சர்க்காரின் போக்குக் கண்டு கோபம் கொள்ளும் நிலைக்கு அவரைக் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறது. காங்கிரஸ் தேசிய பள்ளியிலே பயின்ற வந்து பதவி ஏற்றவரின் நிலையே இதுவானால், நம் போன்றாரின் நிலை வேறுவிதமாக இருக்க முடியுமா?

"மாகாணசுயாட்சி தேவை."

"அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்."

"ராஜ்ய பிரச்னைகள் ராஜ்ய சர்க்கார்களாலேயே கவனித்துக்கொள்ளப்படவேண்டும்."

"ராஜ்யங்களின் செயல் முனைப்பை மத்திய சர்க்கார் நசுக்கப் கூடாது."

"ஒவ்வொரு செயல் துறையிலும் மந்தமான ஒருமைப்பாட்டை உண்டாக்க மத்திய சர்க்கார் முயலக் கூடாது."

"ஒவ்வொரு கட்டத்திலும் மத்திய சர்க்காரால் நாம் சர்வாதிகாரம் செய்யப் படுகிறோம் என்ற நினைப்பு ராஜ்யங்களுக்குத் தோன்றா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்."

"ஒருமைப்பாடு ஒற்றுமையாகாது."

"மேலிருந்து எழும் சர்வாதிகாரத்தாலும் உத்திரவுகளாலும் அல்லாமல், விவாதங்களாலும் பேச்சு வார்த்தைகளாலும் ராஜ்யங்கள் ஒன்று சேர்ந்து பணியாற்ற வழி செய்யவேண்டும்."

"ராஜ்பாதிகாரம் ஓர் அரசியல் கட்சியினரிடத்திலும், மத்திய சர்க்கார் மாறுபட்ட கட்சியினரிடத்திலும் இருப்பது நடைமுறையில் நடைபெறக் கூடியதேயாகும்."

"ஒருமைப்பாடு, ஒன்றுபடுத்தல் என்ற பெயரினால் மத்திய சர்க்கார் உத்தரவுகள் பிறப்பித்தால், அவைகளை ராஜ்ய சர்க்கார்கள் கண்டிப்பாக எதிர்த்தே தீரும்."

"இதன் விளைவு உள்நாட்டுப் பூசலில் வந்து முடியும்."

இவ்வளவும் நிதி அமைச்சர் கனம் கோபால் ரெட்டியார் கூறினதாகும். இவ்வாறு கூறினது எங்கு என்று எண்ணுகிறீர்கள்?

சிற்றூரிலா, பட்டி தொட்டியிலா தேர்தல் பிரசாரத்தின்போதா? இல்லை: மாணவர்களின் பட்டமளிப்பு விழாவிலே பேசி இருக்கிறார். மாணவர்கள் எப்பேற்பட்டவர்கள்? வார்தா கல்வி பயின்றவர்களா? இல்லை! ஐந்து ரூபாய் மாதச் சம்பள உயர்வுக்காக அடிப்படைக்கல்விப்பயிற்சி பெற்ற ஆசிரிய மாணவர்களிடையிலா? இல்லை!. இந்தி படித்துத் தேறிய மாணவர்களுக்கா இவ்வேதனை விளக்கத்தைத் தந்திருக்கிறார் நிதி அமைச்சர்? அதுவும் இல்லை!

உலக வரலாறும், உள்நாட்டு வரலாறும் பயின்று, பலநாட்டு அரசியல் அமைப்பு முறைகள் கற்று, பொருளாதார நுணுக்கங்கள் படித்து, வாழ்க்கை சித்தாந்தங்களின் வளம் தெரிந்து, பன்மொழிகளின் பிறப்பும் சிறப்பும் தேர்ந்து, குறிப்பாகத் தங்கள் மூதாதையர்களின் முடி சூடிய வாழ்வைத் தங்களுடைய இன்றைய சீரிழந்த வாழ்வுடன் ஒப்பவைத்துப் பார்த்து, இவ்விழிநிலைக்குளது, எவர் காரணம் என்பதை நன்காராய்ந்துத் தெளிந்து, புதுவாழ்வு காணவேண்டும் என்ற துடிதுடிப்போடு, பல்கலை பயின்று வெளிக் கிளம்பும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வீர இளைஞர்களுக்கு, தன் அனுபவத்தால் பெற்ற வேதனை விருந்தைத் திகட்டும் அளவு ஊட்டி இருக்கிறார் நிதி அமைச்சர் கோபாலர்.

புதிய இந்திய அரசியல் சட்டத்தில் ராஜ்யங்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் இருந்து வரும் உறவு முறையையும், அதன் பலனாக ராஜ்யங்களில் வளர்ந்து வரும் மனக் கசப்பையும்நிதி அமைச்சர், படித்துப்பட்டம் பெற்ற மாணவர்களிடம் விளக்கமாகக் கூறினதோடு மட்டும் இல்லாமல், ராஜ்யங்களுக்கு அவர் கோரும் உரிமை எத்தகைய முறையில் இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பாகக் காட்டி இருக்கிறார்.

“தன்னுடைய எல்லைக்குட்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதில் மத்திய ஆட்சியாளர்களுக்குள்ள உரிமையை எப்படி மாகாண ஆட்சியாளர்கள் தட்டிக் கேட்க முடியாதோ, அப்படித்தான் மாகாண ஆட்சியாளர்கள், தவறான திட்டங்களை மேற்கொண்டால் கூட, அவர்களை, மத்திய ஆட்சியாளர்கள் தட்டிக் கேட்கக் கூடாது.”

மாகாண ஆட்சியாளர்களை மத்திய ஆட்சியாளர்கள் தட்டிக் கேட்கக் கூடாது என்கிறார் அமைச்சர். எது செய்தாலும், எப்படி நடந்தாலும் மாகாண ஆட்சியாளர்களின் போக்கில் மத்திய ஆட்சியாளர்கள் குறுக்கிடக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறுகிறார் அமைச்சர்.

மத்திய சர்க்காரின் தலையீடு கூடாது என்று கூறும் நிதி அமைச்சர், மாகாணங்களுக்கு சர்வாதிகாரத்தை விரும்புகிறார் என்று சொல்வதற்கில்லை. மாகாண ஆட்சியாளர்களைசிருஷ்டித்தவர்கள் அம் மாகாண மக்களே யாவர். மக்களுக்குள்ள முழு அதிகாரத்தை, குறிப்பிட்ட காலம் வரையில் நிறைவேற்றுவதாகச் சிலர் பெற்று ஆட்சியாளர்களாக மாறுகிறார்கள். மக்களின் தர்மகர்த்தாக்களே ஆட்சியாளர்கள். ஆட்சியாளர்கள் தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டால், பயன் தராத திட்டங்களை நடைமுறைக்குக் கொணர்ந்தால் அதனைத் தடுத்து நிறுத்தும் உரிமை, ஆட்சியாளர்களைத் தோற்றுவித்த மக்களுக்குத்தான் உண்டு.

மக்கள் எஜமானர்கள்--ஆட்சியாளர்கள் மக்களின் ஊழியர்கள்.

“மாகாண சட்ட சபைகளிலிருந்தும் மக்களிடமிருந்துந்தான் மாகாண ஆட்சியாளர்களுக்குத் திருத்தம் வரவேண்டும்.”

மாகாண ஆட்சியாளர்களிடம், யார், தங்களுக்கே நிரந்தரச் சொத்தான ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தார்களோ, அதே மக்களுக்கும், அதே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபை உறுப்பினர்களுக்குந்தான், ஆட்சியாளர்களைத் திருத்தவும், கண்டிக்கவும், நேர்படுத்தவும் முழு அதிகாரம் உண்டு என்று மக்களாட்சி முறையின் மாண்பினை நிதி அமைச்சர் நன்கு எடுத்துக் காட்டி இருக்கிறார்.

மத்திய சர்க்காரில் பல ராஜ்யங்கள்--மாகாணங்கள் சேர்ந்து இருக்கின்றன. அப்படிச் சேர்ந்துள்ள ஒவ்வொரு மாகாணத்தின் தேவைகளும் வெவ்வேறு ஆகும். எடுத்துக் காட்டாக பம்பாயை எடுத்துக் கொள்ளுவோம். நவீனத் தொழில் வளம் உள்ளதாக அம் மாகாணம் இருந்துவருகிறது. நமது மாகாணம், பம்பாயைக் காட்டிலும் பல மடங்கு தொழில் வளத்தில் பின்னணியில் இருக்கிறது. எனவே நமது மாகாணத்தையும் சிறந்ததோர்தொழில்வளமுள்ள பகுதியாக ஆக்க வேண்டியது மாகாண ஆட்சியாளர்களுக்கு நீங்காக் கடமையாகிறது. தொழில் வளம் ஏற்பட்டால்தான் இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர வழி பிறக்கும். தங்கள் வாழ்க்கைத்தரம் உயர்வதை மக்களும் விரும்புவர். ஆனால் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான பரிபூர்ண அதிகாரம், மக்களால் நியமிக்க

மாநில மாநாடு — நிகழ்ச்சி நிரல்

13—12—51

காலை: ஊர்வலம், கொடியேற்று விழா, கண்காட்சித்திறப்பு விழா.

மாலை: இன்னிசை விருந்துகள், என். எஸ். கிருஷ்ணன் சொற்பொழிவு,

இரவு: "போராட்டம்", "கல்சுமந்த கசடர்" நாடகங்கள்.

14—12—51

பகல்: திறப்பு விழா, சிறப்புச் சொற்பொழிவுகள் :—தோழர்கள் : நெடுஞ்செழியன், சம்பத், கருணாநிதி, மனோகரன், மதியழகன், சத்தியவாணிமுத்து.

இரவு: "இளைஞன் குரல்" நாடகம்.

15—12—51

பகல்: வரவேற்புரை, தலைவர் தேர்தல், தலைவர் முன்னுரை.

இரவு: "ஜமீன் மாளிகை" நாடகம்.

16—12—51

பகல்: தீர்மானங்கள், தலைவர் முடிவுரை.

இரவு: "சந்திரோதயம்" நாடகம்.

கப்பட்ட ஆட்சியாளர்களுக்கு இருந்தாகவேண்டும். ஆனால், அதற்கான அதிகாரமோ இன்றைய மாகாண ஆட்சியாளர்களிடம் அறவே இல்லை. ஆட்சியாளர்கள் மத்திய ஆட்சியாளர்களின் தயவுக்குக்காத்துக் கிடக்க வேண்டியவர்களாகிறார்கள். மத்திய ஆட்சி மன்றத்தில் நமது மாகாணப் பிரதிநிதிகள் மட்டுமில்லை, தொழில் வளம் சிறந்த பம்பாய் மாகாணப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். தங்கள் மாகாணத்தின் தொழில் வளப் பாதுகாப்புக்காக நமது மாகாணத்தின் தொழில் ஏற்பாடு முயற்சியைத் தடுக்கவேமுயற்சிப் பார்கள். இன்று நடைமுறையில் நிகழ்ந்து கொண்டிருப்பதும் இதுதான். மத்திய ஆட்சி மன்றத்தில் நமது மாகாணப் பிரதிநிதிகள் கரடியாகக் கத்தினபோதிலும், அந்தப் பேச்சு அம்பலம் ஏறாது. நமது தொழில் முன்னேற்ற ஆர்வமும் நிறைவேறாது. நமது மாகாணமும் என்றும் போல் விவசாய நாடாகக் கிடக்க வேண்டியதுதான் நமது மக்களும் வறுமைக்கும் கொடுநோய்க்கும் ஆட்பட்டு காலம் வருவதற்கு முன்பே மண்ணோடு மண்ணாகிக் கொண்டு இருக்கவேண்டியதுதான்.

மாகாண ஆட்சியாளர்களிடமே முழு அதிகாரமும் இருக்குமானால், எத்தனையோ வகையில் நமது மாகாணத்தைச் செல்வச் சிறப்புடைய நாடாக மாற்றலாம். பிறர் பொறாமைப்படக் கூடிய அளவில் கூட நமது இல்லாமையை விரட்டலாம். இவ்வளவும் ஒரு பக்கம் இருக்க, இங்கு வேலை கிடைக்காமல் கப்பலேறிக் கடல் கடந்து சென்று தேயிலைத் தோட்டத்திலும் ரப்பர் தோட்டத்திலும் மானமிழந்து அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்களே அவர்களையும் கூட தாய் நாடு திரும்பி நல்வாழ்வு வாழச் செய்யலாம். நிற்க,

மத்திய ஆட்சியாளர்கள் மாகாண ஆட்சியாளர்களை எப்படி மதிக்கிறார்கள், எப்படி நடத்துகிறார்கள், இரு ஆட்சியாளர்களுக்கும் எத்தகைய உறவு இருக்கவேண்டும் என்பதையும் நிதி அமைச்சர் சுட்டிக் காட்ட மறந்துவிடவில்லை.

"மாகாண சர்க்கார்கள் மத்தியசர்க்காரின்சகோதர சர்க்கார்கள் ஆகும். மாகாண சர்க்கார்கள் இது போலவே நினைத்து நடத்தப்படவேண்டும், மத்திய சர்க்காருக்குக் கீழ்ப்பட்ட சர்க்கார்களாக நடத்தப் படக்கூடாது."

இன்றுள்ள புதிய அரசியல் சட்டத்தில் மாகாணங்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் இருக்கும் தொடர்பு—உறவு முறை இதுதான். இந்தத் தொடர்பின் விளைவாக மாகாணங்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களை நிதி அமைச்சராக இருந்து அனுபவித்ததின் விளைவாக, பரிகாரம் கூறும் அளவிற்கு கனம் கோபாலர் தெளிவும் பெற்றிருக்கிறார்— துணிவும் பெற்று இருக்கிறார்.

ஒரு ராஜ்ய சர்க்காரின் நிதி நிர்வாகத்திலிருந்து, எடுத்ததற்கெல்லாம் டெல்லிக்குக் காவடி தூக்கி, எல்லாக் கோரிக்கைகளுக்கும் 'இல்லை' என்ற பதிலைப் பெற்று, பொது மக்களிடம் முகத்தைக் காட்ட அஞ்சி, பொறிக்குள் சிக்கிய புலிபோல் வேதனையையும் விளக்கத்தையும் ஒருங்கே கூறும் தகுதி திறமையையும் பெற்றுவிட்டார் நிதி அமைச்சர். அவர் சொற்களி

லும், அவர் காணவிழையும் தன்மையிலும், உண்மை நிலை தெரியும் யூகம் படைத்தவர் எவரும் குறை காண முன் வரமாட்டார். ஆனால் 'சுதேசமித்திரன்' ஆசிரியருக்கு ஆத்திரம் பொங்கி வழிந்து விட்டது அமைச்சர் மீது. அகில இந்திய ஒற்றுமைக்கு ஆசீர்வாதம் செய்கிறது மித்திரன்.

சு. மி. ஆசிரியரின் செயல் கண்டு ஒருவரும் ஆச்சரியப் படத் தேவையும் இல்லை, அச்சங்காட்ட அவசியமுமில்லை.

ஆசிரியர், கண்ணை விலையாகக் கொடுத்து சித்திரம் வாங்கச் சொல்லுகிறார்!

அமைச்சர், கண் வேண்டும் என்கிறார்.

ஆசிரியர், ஒற்றுமையின் பேரினால் அடிமையாக வாழச்சொல்லுகிறார்.

அமைச்சர், உண்மையான உரிமை வாழ்வு வேண்டுகிறார்.

ஆசிரியர், மானம் சிறிதென்கிறார். அமைச்சர், மானம் பெரிதென்கிறார்.

அமைச்சர் வருணாஸ்ரமத்தைத் தீதென்று எடுத்துக் கூறி, அதுதான் நமது தேசியத்துக்கு பரமவைரி என்று குற்றஞ்சாட்டி, "**அதனுடைய தீவினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறீர்களா அல்லது அதைப் பாதுகாக்கப் போகிறீர்களா?**" என்று காரசாரமாகக் கேட்கிறார். கேள்வியைக் கேட்டதோடு மட்டும் நிற்காமல், வருணாஸ்ரமக் கேடுகளைக் களைய 'கலப்பு மணம்' முக்கியமாகத் தேவை என்று பரிகாரத்தையும் கூறி இருக்கிறார்.

இது பற்றி சு. மி. ஆசிரியர் மூச்சுவிடவில்லை. ஆதரித்து ஒரு வார்த்தை கூறவில்லை. எப்படி முடியும் அவரால். அவர்தான் வருணாஸ்ரம வித்தாயிற்றே? நிற்க,

நிதி அமைச்சரே கூறும் மாகாண சுயாட்சிக்கும், நாம் கோரும் திராவிட நாட்டுக்கும் வேற்றுமை அதிகம் கிடையாது. அடிப்படை உணர்ச்சி இரு இடத்திலும் ஒன்றுதான்.

அமைச்சர் ஐந்தாண்டு அனுபவத்திற்குப் பின்னர் கூறுகிறார். மேலும் சில நாள் சென்ற பின்னர் அவரே திராவிடநாடுஎன்று கூறவந்தாலும் கூறவருவார்.

புளி என்று புளியம்பழத்தைக் கூறினாலும் புளிக்கத்தான் செய்யும் அல்லது ஆந்திரத்தில் சிந்தப்பண்டு என்று கூறினாலும் புளிக்கத்தான் செய்யும். இரண்டு மொழியின் சொல்லும் அவைகளின் உச்சரிப்பும் வெவ்வேறாக இருந்த போதிலும் புளியையே குறிப்பதைப் போல் நாம் காண விரும்பும் திராவிட நாட்டைத்தான், அப் பெயரில்லாமல் காண விரும்புகிறார் கனம் கோபாலர், சென்னை மாகாண காங்கிரஸ் சர்க்கார் நிதி அமைச்சர்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

திரள்திரளாக வாரீர். திராவிடத் தனியரசை நிறுவ, மக்கள் ஆட்சியை மலரச் செய்ய, பழமைப் படுகுழிகளை ஒழித்துக்கட்ட, சமதர்மப் பாதையில் தென்னாட்டைச் செலுத்த, வாரீர்—வாரீர்—சென்னைக்கு வாரீர்.

போர்வாள்

மாநில மாநாட்டு மலர்

முக்கிய அறிவிப்பு

மாநில மாநாட்டை முன்னிட்டு, 15—12—51 "போர்வாள்" இதழ் வெளிவராது. நம் அடுத்த இதழ் 22...12—51 சனிக்கிழமையன்று, மாநில மாநாட்டு மலராக, சிறந்த முறையில் வெளிவரும்.

மாநாட்டு முழு நிகழ்ச்சிகள், தலைவர்கள் சொற்பொழிவுகள், மாநாட்டு நிகழ்ச்சிப் படங்கள், தீர்மான விவரங்கள், சிறந்த கட்டுரைகள், கண் கவரும் ஆர்ட் அட்டை, நெஞ்சை அள்ளும் அறிவு விருந்துகள், யாவும் நிறைந்தது

மாநாட்டு ஓவியம், இப் "போர்வாள்" மலர்

விலை அணா ஆறு

எதிர்ப்புக்கு அஞ்சாத இலட்சியவாதி!

[தங்கவேலர்]

கரத்திலே பேனா, கருத்திலே புதுமை எண்ணங்கள்...இப்படியாக உலவுகின்ற இலட்சியவாதியைக் கண்டு ஆதிக்கபுரியினர் கனல்கக்கிகளாக மாறிடுவது நாட்டுப்போக்கிலே—முடியாது வளர்ந்துவரும் தொடர் கதைதான்! துப்பாக்கியிலேயிருந்து பறக்கும் குண்டுகளைவிட, மின்னல் வேகத்திலே பாய்ந்துவரும் அம்பினுடைய தாக்குதலைவிட...வேதனை தருவதாக, எழுத்தாளனின் பேனா வீச்சு இருந்திடுவதை, அகில உலகினிலும் ஆர்ப்பரிப்பு செய்துவரும் கூட்டம், அவ்வப்போது காலச் சூழ்நிலையிலே எண்ணிடத்தான் செய்கின்றது.

ஏழையும்—மாளிகைவாசியும் நடத்துகின்ற போராட்டத்திலே மாளிகைவாசியைத் தாக்கிப் பேசி ஏழைக்குத் துணையாக...அவனின் மன நிலையையும், மனதிலே அலைமோதிக் கொண்டிருக்கின்ற மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் யாராவதொரு எழுத்தாளன் ஏதாவது ஒரு ஏடாகத் தீட்டி வைத்து விட்டால், மாளிகை வாசிகள், ஆதிக்கவாதிகளின் துணையோடு அந்த ஏட்டாசிரியன்மீது முழு மூச்சாக மோதுவதை அப்போதுதான் நாட்டோர் இலகுவிலே காணமுடியும்.

விடுதலை வேட்கையை இதயத்திலே தாங்கிய போக்கினருக்கும், நாட்டின்மீது ஆதிக்கக் காதல் கொள்ளுவோருக்குமிடையே நடந்திடும் போராட்டக் காதையைக் காலப்போக்குக்கு ஏற்ப எழுத்தோவியங்களாகத் தீட்டிக் கடமையாற்ற முயலுகின்ற எழுத்தாளத் தோழர்கள் மீது வீசப்படுகின்ற அடக்குமுறை அம்புகள் பலப்பல! வேட்டைக் கூட்டத்தின் இடையே சிக்கிவிட்ட புள்ளிமானை நோக்கி ஆயிரமாயிரமாக அம்பு பாய்ச்சப்படுகின்றதே அதைப்போல, ஆதிக்கபுரியினர், அவர்கள் சீமான்களாக இருந்தாலும் சரி; ஆட்சிப்பீடத்திலே அமர்ந்து கொண்டு தர்பார் ராகம் பாடுகின்ற ஆளும் போக்கினராகயிருந்தாலும் சரி......எங்கெந்த எழுத்தாளர்கள் மாளிகை வாசிக்கும்—ஏழைக்கும் நடக்கின்ற போராட்டத்தைத் தீட்டிக் காட்டுகிறார்களோ அவர்கள் மீதெல்லாம் தங்கள் அடக்குமுறை ஆயுதங்களைப் பாய்ச்சத்தான் செய்கிறார்கள். விடுதலை வீரர்களுக்கும் ஆதிபத்தியர்களுக்குமிடையே பரவி வருகின்ற பூசலையும், இன்னும் எங்கெந்த வடிவிலேயோ நேர்மைக்கும்—அநீதிக்கும் இடையே நடந்து வருகின்ற போராட்டங்களையும் எழுத்தாக—ஏடாக—வடித்திடுவது ஆதிக்க அகராதியிலே "நாட்டுத் துரோகம்" எனப்பெயரிடப்பட்டிருக்கிறது.

உண்மையை எடுத்துக் கூறுவது "நாட்டுத் துரோகம்" என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிறதே ஆதிக்கவாதிகளால் நாட்டுநிலையைப் படம் பிடிப்பது நாசகார செய்கை எனகூறிடப்படுகிறதே நாடோடித் திட்டத்தினரால் அன்ற கருத்துக்காக காலத்தால் அரும்புவிட்டுவளர்க்கப்பட்ட கருத்துக் களஞ்சியங்கள், எழுத்துலகச் சிற்பிகள்.... அச்ச மாளிகையிலே நுழைந்து கொண்டு அலைமோதிக் கிடக்கவில்லை! எதிர்ப்பு எந்த வடிவெடுத்து உலவியபோதிலும் கடமையே கருத்தாகி இலட்சிய வெற்றிக்கு...பலப்பல புதுப் பாடங்களை—பாதைகளை வகுத்துத் தந்திருக்கின்றனர். ஏதாவது ஒரு நாடு எழுச்சி எரிமலையாகிப் பின்னர் விடுதலையடைந்திருக்கிறதென்றால்.... அத்தகு நிலைக்கு மிகமிகக் காரணமும் காரியமுமானவர்கள்—எழுத்தாளர்கள் என்று நாட்டின் நல்லறிவாளர்கள் ஏற்றிப் போற்றிடும் அளவுக்குத் தங்களின் இலட்சியப்பாதையிலே இன்ப நடை பயின்றவர்கள் எழுச்சி எழுத்தாளர்கள்!

இலட்சியத்தைக்காக்கப்பேனா தூக்கியவர்களின் வரிசையிலே அணிவகுத்து நின்றவன்தான்...பிரெஞ்சு நாட்டு எழுத்தாளன் ரூசோவும்! ரூசோ என்ற அந்தச்சொல் இன்றைய அறிவு உலகுக்கு விடிவெள்ளியாகக் காட்சியளிக்கின்றது. சுதந்திரத் தந்தை...எழுத்திலே புரட்சி பூட்டிய புதுமை வீரன் என்றெல்லாம் அகில உலக மேதைகளால் புகழ்ந்திடும் அளவுக்கு ரூசோ தனது செயல் அத்தியாயத்தை உருவாக்கி வைத்தான். இத்தகு நிலையினை அவன் அடைந்திடுவதற்கும் முன்னர் வழக்கமாக உலவுகின்ற வேதனைப் புயல் ரூசோவின்மீதும் மோதத்தான் செய்தது!

ரூசோ எழுத்தாளனாகிய நேரத்திலே (18-ம் நூற்றாண்டில்) பல கோணங்களினின்றும்

கிளம்பிய எதிர்ப்பு அம்பைத் தாங்கிக்கொள்ளும் சூழ் நிலையிலேயிருந்தான். பாதிரிகள்... அவர்களின் பாதந் தாங்கிக் கிடந்த பக்த கோடிகள்... பாராளுமன்றத்தினர், இந்த இவ்வளவு பேரையும்—அவர்களின் தர்பார் காட்சி முழுவதையும்—ரூசோ தனது எழுதுகோல் மூலமாகச் சித்திரமாக்கிக் காட்டினான்.... அந்த அந்தணேபரிடமுமிருந்து நாட்டுக்கு நாசசக்தி உருவாகிய காரணத்தால்! எனவே, ரூசோவின் தாக்குதலை நேரே முகங்கொடுத்துத் தடுத்து விடுவதற்காகப் பணபலம், பக்கபலம் ஆட்சித்துணை ஆகியவற்றோடு ஆதிபத்தியத்தினர் மேலும் மேலும் முன்னேறி அடக்குமுறை அம்புகளை ரூசோமீது வீசினர். எதையுந் தாங்கும் இதயம் படைத்தவன் எழுச்சி எழுத்தாளன் என்ற இலட்சிய முழக்கத்தை முழங்கிக்கொண்டே,....தாக்குதல் வளர வளர ரூசோவின் எழுத்துக்கள், புது பெருகுபெற்று, மேட்டுக் குடியினரின் லீலா விநோதத்தை, குப்பை—மேட்டினர் புரிந்துகொள்ளுகின்ற அளவுக்குத்தெளிவாக விளக்கிவைத்தன.

"ஏழையாயினும் செல்வனாயினும் வலியோனாயினும்மெலியோனாயினும்மனிதன் உழைக்கக்கடமைப்பட்டிருக்கிறான். உழைக்காத ஒவ்வொரு சோம்பேறியும் திருடனே!"......என்று கூறிய ரூசோவைப் பார்த்து ஊரை ஏய்த்துவந்த பாதிரிகள் கனல்கக்கிகளாக மாறியதிலே ஆச்சரியமில்லை! வானுலகைக்காட்டி, தேவர்தம் திருக்கூத்தைவிளக்கி, பாபாத்மாக்களைப் புண்யாத்மாக்களாக திருத்திட பாதிரிகள் பாரிலே பவனி வருவதாகக்கூறி "கபட நாடகம்" ஆடிய போக்கினைத்தான் ரூசோ எழில்மிகு ஏடாகத் தீட்டி மக்கள் மன்றத்திலே விரித்துவைத்தான். அந்த ஏட்டிலே......... காட்டியிருந்த கபட நாடகக் காட்சியைக் கண்டு நாட்டவர் கருத்திலே மாறுபட்டவர்களாகி விட்டால் ...எத்துத் தனத்துக்கு, சூழ்ச்சி வலைக்கு யாரும் இலகுவிலே சிக்கிவிட மாட்டார்களென்ற எண்ணக் கண்ணோட்டத்திலே ...ரூசோவின் குற்றச் சாட்டுகளையெல்லாம் "வேதநிந்தகன்" என்ற பெயரை அவனுக்குச் சூட்டிவிடுவதன் மூலமாக, சிக்கல் நிலையினின்றும் விடுபட்டுக் கொள்ள சாகசமாடினர் பாதிரிகள். மக்களின் எதிர்ப்பை இந்த மாதிரியானமுறையிலேதொகுத்துக் காட்டினர்—மறுமலர்ச்சிக் கருத்துக்களைத் தாங்கிக்கொண்டிருந்த ரூசோ மீது!

"விடுதலையைத் துறப்பது மனிதத் தன்மையையே துறப்பதாகும். மனித உரிமைகளை, இன்னும் அதன் கடமைகளையும்கூட விட்டு விடுவதாகும்!"...என்று ரூசோ அடிக்கடி எடுத்துக் காட்டிய அறஉரைகள் ஆதிக்கவாதிகளுக்கு—விடுதலை வாசிகளுக்கு—வீசும் வெடிகுண்டுகளாகக் காட்சி தந்தன. எனவே, "வேதநிந்தகன்" என்ற பட்டத்தையும் "துரோகி" என்ற விபரீதச் சொல்லையும் தாங்கிக் கொள்ளவேண்டியவனாகி, ரூசோ தனது இலட்சியப் பாதையிலே எழுதுகோலின் ஒரே துணையோடு நடக்கலானான்!

எதிர்ப்பை புன்னகையால் மறைத்துவிட்டு புதுமைபுரிகாண மக்களுக்கு எவ்வளவோ அன்பழைப்பு விடுத்தும்...பாதிரிகளிடமும், பாராண்டவர்களிடமும் பயபக்தியுடையவர்களாக மக்களினம் இருந்த காரணத்தால் சந்தேகக் கண்ணோடுதான் சஞ்சலமடைந்தவர்களாக ரூசோவின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இந்நிகழ்ச்சி ஏற்கனவே வீசிக் கொண்டிருந்த புயலைத் தொடர்ந்தே மேலும் வீசிய புதிய புயலாகிறது!

ரூசோ நடுத்தர வாழ்வு வாழ்ந்த சாதாரண ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் கூட அல்ல......சமூகத்தின் அடித்தளத்திலே வாழ்ந்திடவேண்டிய ஏழை. வாழ்வுச் சக்கரத்தை ஓட்டுவதற்கே ரூசோவின் முழுநேர உழைப்பும் தேவையாகயிருந்தது. இந்த நிலையிலே ஆதிக்கவாதிகளின் அம்பு வீச்சையும்தாங்கிக்கொண்டு, இலட்சிய முழக்கத்தையும் ஒலித்துக் கொண்டு வாழ்வுச் சக்கரத்தைத் தள்ளவேண்டுமானால் நிச்சயம் வேதனைச் சிகரத்தின் உச்சியில் தான் உலவிடவேண்டும். அந்த வேதனை நிலைதான் ரூசோவின் முன்பு விரிந்து கிடந்தது! ஓட்டைக் குடிசையிலே சொந்த வாழ்வு வாழ்ந்த தோழியர் "சுரேன் பெர்னாட்" என்ற அழகியின் காதலிலே மலர்ந்த கனியாகவந்துபிறந்தான்ரூசோ. அந்த மாது சிரேண்மணி—சுரேன் பெர்னாட் — ரூசோ பிறந்த அன்றே மரணபுரி வாசத்தைத் துவங்கிவிட்டாள். தாயற்ற ரூசோவைக்கவனிக்கும் கடமை "இசாக் ரூசோ" என்ற அவனின் தந்தைக்குச் சுமையாகியது. வேடிக்கை விநோதங்களிலே, புது ஜோடிகளின் லீலைகளிலே இசாக் ரூசோ களித்திருந்த நேரத்திலே, அக்கம் பக்கத்தார்களின் அன்புப் பணியால் ரூசோ வளர்ந்து, வாலிப மாடியின் பயணத்துக்கு பருவத்தை ஏணியாகக் கொண்டு நடந்துகொண்டிருந்தான். பற்றற்றிருந்த ரூசோவின் அந்த வாலிபப் பருவத்தைப்பற்றி எழுத்தாளர்

(12-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 8—12—51 சனிக்கிழமை

வாரீர்! வாரீர்!

தோழர்களே வாருங்கள்! தோழியர்களே வாருங்கள்! வீரர்களேவாருங்கள்!வீராங்கனைகளே வாருங்கள்! தீரர்களேவாருங்கள்!திடநெஞ்சு மிக்கவர்களே வாருங்கள்! இலட்சியப் பாதையில் ஏறுநடை நடந்துவரும் திராவிட இளைஞர்களே, மகத்தான ஆற்றல் படைத்த மாணவமணிகளே, பாட்டாளி நண்பர்களே, பாடுபட்டும் பலன் காணாது தவிக்கும் ஏழை உழவர்களே, விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும்விலைவாசிகளைக் கண்டு மனம் ஒடிந்துகிடக்கும் மத்தியதர வகுப்பினரே, ஆளவந்தார்களின் அடக்குமுறை அம்புகளைத் தாங்கித் தாங்கி வடுநிறைந்த உடலும் வயிரம் பாய்ந்த உள்ளமும் பெற்றிருக்கும் மக்களின் தொண்டர்களே, ஜனநாயக சக்திகளே, வாருங்கள் வாருங்கள், எல்லோரும் வாருங்கள். கூட்டம் கூட்டமாக வாருங்கள். அணி அணியாகத் திரண்டு வாருங்கள், குடும்பம் குடும்பமாக வாருங்கள்சென்னையில்டிசம்பர்13, 14, 15,16 வியாழன் வெள்ளி சனி ஞாயிறு ஆகிய கிழமைகளில், எஸ்.ஐ ஏ ஏ. மைதானத்தில், திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு, மிகச் சிறந்த முறையில் நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டில் பங்கு பெற, அன்புள்ள திராவிடத் தோழர்களே, ஓடோடி வாருங்கள். வந்து, உங்கள் சீரிய ஆலோசனைகளைத் தாருங்கள். சிறந்த திட்டங்களைத் தீட்ட வழிவகை கூறுங்கள். தீட்டப்பட்ட திட்டங்களை நடைமுறை நாதங்களாக்குவது எப்படி என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.

இன்பத் திராவிடமே எமது இலட்சியம் என்று வீர முழக்கமிடும் தீர இளைஞர்கள் ஆயிரமாயிரவர் நிறைந்தது, திராவிட முன்னேற்றக் கழகம்

பன்னெடுங்காலமாகத் தென்னாட்டை வதைத்து வரும் வருணாஸ்ரம வல்லரசை வேரோடு வெட்டி வீழ்த்தும் வல்லமை மிகுந்தது, திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையிடும் பழமைச் சக்திகள் அத்தனையையும் தவிடு பொடியாக்கிடும் தீர மும் திடநெஞ்சமும் வாய்ந்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

சேரன் செங்குட்டுவன் பரம்பரைகனகவிசயர்பரம்பரைக்கு ஆளடிமைகளாகக் கிடப்பதா — இனியும் நாம் அதைவிட்டுவைப்பதா என்று நாட்டு மக்களையெல்லாம் கேட்கும் நல்லறிவு மன்றம், திராவிட முன்னேற்றக் கழகம்.

இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்றடக்கி, ஈழத்தில் கொடி நாட்டி, திக்கெட்டும் புகழ் பரப்பிய திராவிட சமுதாயம், இன்று, தொட்டதற்கெல்லாம் டில்லியின் உத்தரவைக் கேட்டுக்கொண்டிருக்கும் இழிவை, அவமானத்தை, அடியோடு ஒழிப்பதற்காக அரும்பாடுபட்டு வரும் மக்கள் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம்.

பேச்சு, எழுத்து, நடிப்பு, இசை, ஓவியம், காவியம், திரைப்படம், ஆகிய பல்வேறு முனைகளிலும் 'போர் முகாம்' அமைத்து, பழமைச் சகதிகளுக்குச் சாட்டையடி கொடுத்துவரும் மறுமலர்ச்சித் தூதுவர்களை ஏராளமாகக்கொண்டது, திராவிட முன்னேற்றக் கழகம்.

தென்னாட்டில் உள்ள ஏனைய எல்லா அரசியல்கட்சிகளையும்விட மிக அதிகமான அளவுக்கு மக்களிடம் செல்வாக்கும் புகழும் ஆதரவும் பெற்றிருக்கும் புரட்சிப்பாசறை, திராவிட முன்னேற்றக் கழகம்.

650-க்கு மேற்பட்ட கிளைகளை அமைத்து, ஆயிரக்கணக்கான பொதுக்கூட்டங்களைக் கூட்டி, மாவட்டந்தோறும்மாநாடுகளை நடத்தி,

தி. மு. கழக மாநில மாநாடு

சென்னை நகரில், எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

டிஸம்பர் 13, 14, 15, 16 வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறுகளில்.

தலைவர்:	ஓவியக்காட்சித் திறப்பாளர்:
அண்ணாதுரை	சி. பி. சிற்றரசு
திறப்பாளர் :	வரவேற்புத்தலைவர் :
கே. கே. நீலமேகம்	N. V. நடராசன்

வாரீர்! வாரீர்! அனைவரும் வாரீர்!

பட்டிதொட்டியெங்கும் பகுத்தறிவுக குரல் எழுபபி வரும் மகததான முற்போககு சகதி, திராவிட முன்னேற்றக கழகம்.

தடியடியில் தொடங்கி துப்பாக்கிககுண்டுகள்வரையிலே, ஆட்சியாளர்கள் அளித்த அததனை அடக்குமுறைகளையும், புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டு, பூரிப்புடனபவனிவரும்ஜனநாயக இயக்கம், திராவிட முனனேற்றக கழகம்.

அந்தக கழகத்தின் சக்தியைச் சிதைகக ஆளவந்தார்கள முயன்றாகள — முடியவில்லை.

தேசியக் கட்சியினர் முயனறார்கள் — முடியவிலலை.

சனாதனச்சக்திகள்முயன்றன—முடியவிலலை.

சர்வ வலலமை படைத்த பார்ப்பனீயம் முயன்றது—முடியவிலலை.

நம் "முன்னாள் தோழர்கள்" முயனறனர்—முடியவில்லை.

அவர்கள் அத்தனை பேரும் அளித்த ஓயாத எதிர்ப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சிறப்பாக வளர்ககும் செழிப்பான எருவாயிற்றே தவிர, அவர்களுடைய எதிர்ப்பினால, கழகம், துளியளவும் சீர்குலையவில்லை. மாதத்திறகு மாதம், வாரத்திறகு வாரம, நாளுக்கு நாள், கழகம், நாளொரு மேனியும பொழுதொரு வண்ணமுமாக வளர்நது வந்தது—வளர்ந்துவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக கூறிவரும் கருத்துககள், தீட்டிக் காட்டிவரும் திட்டங்கள், சொல்லி விளககிவரும் கொள்கைகள், தன் இருதய கீதமாககொண்டுள்ள நோககங்கள், நாட்டுமககள் முன நிறுத்தியுள்ள இலட்சியங்கள், இவை அததனையும் நியாயமானவை. நாட்டு நன்மைககு நிச்சயம் தேவையானவை. நேர்மைக்குணம் படைத்த எவரும் மறுகக முடியாதவை. எனவே தான், எதிர்ப்புகள், எண்ணற்றன புறப்பட்டபோதிலும, கழகததின் வளரும் சக்தி; அவற்றையெல்லாம் சிதைவதில்லை — சீர்குலைவதில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், சீமான்களின் சகதி அலல, பூமான்களின் சக்தி அலல, நிலப்பிரபுக்களின் சகதி அல்ல—அது மக்கள் சகதி! ஆகவேதான் அது மகததான சக்தியாக இருந்துவருகிறது. அந்த மகத்தான சகதியின் வேகமான வளர்ச்சியை அழகாக எடுத்துககாட்டும் ஓர் அற்புதமான ஓவியம்தான் அடுத்த வியாழனன்று தொடககமாகும் மாநில மாநாடு.

ஓட்டு ஓட்டு என்று எல்லாக கட்சிகளும் ஓட்டு வேட்டையாடிககொண்டிருக்கும் நேரம் இது. தேர்தல் காய்ச்சல மிக அதிகமாக அடித்துககொண்டிருககும் வேளை இது. விடுதலை கிடைத்த பிறகு முதல பொதுத் தேர்தல நடைபெற இருககிற சமயம் இது. மாட்டுப பெட்டிககாரர்கள், போலோ பாரத் மாதாககீஜே என்று 'முழக்கம்' எழுப்பிக் கொணடு, மீண்டும மக்களை நெருங்கும் காலம் இது. இப்

(18-ம் பக்கம் பார்க்க)

விடுகதையை அரைகுறையாக் கூறி முடிப்பதற்குள்ளாக அதன் பதிலைச் சிறுவர்கள் சில சமயங்களில் கூறிவிடுவதைப் போலிருந்தன, பரிவின்பனின் அந்த வார்த்தைகள்—கோமளனுக்கு! பலவர்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த இனிய ஓவியங்களைக் கண்டவுடனே, பரிவின்பனின் வாய், "பூசுரப் புல்லர்கள்" என்று முணுமுணுத்ததைக் கேட்டவுடன், அக் கொள்ளைக் கூட்டத்தலைவனுக்கு; அந்த அழகோவியங்களுக்கும் ஆரியப் புல்லுருவிகளுக்கும் இடையே உள்ள சோகச் செய்தி-வேதனை வரலாறு பூராவும் பரிவின்பனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்பது புலனாகியது!

"நண்பரே, இந்த அழகோவியங்களத்தனையும் ஓவியர் திலகம் இன்பதாசர் வரைந்தவைதாமே?" சிறிது நேர அமைதியை இலுவாகப் பிளந்து கலைத்தன, பரிவின்பனின் துடிப்பான இந்த வார்த்தைகள். பல கேள்விகளுக்கிடையே சிக்கித் தவித்துச் சுய உணர்வின்றி நின்றுகொண்டிருந்த கொள்ளையர் தலைவனுக்குப் பரிவின்பனின் இந்தக் கேள்வி சுயவுணர்வு தந்தது.

"ஆம், நண்பரே, இவை யாவும் முல்லை ஓவியர் இன்பதாசரின் விரல்கள் உண்டாக்கியவைதாம்! அந்த உன்னத விரல்கள் இனி தூரிகையேந்தி இன்னும் பல அழகோவியங்களையுருவாக்க முடியாதபடி செய்து விட்டார்களே சண்டாளர்கள்!"

அமைதி நிலவியது. இணற்றினுள் அழுந்தி மூழ்கிவிட்டவர்களிடும் சத்தம் வெளியே இருப்பவர்களுக்குக் கேட்க முடியாமற் போவதைப் போல் அவர்கள் இருவர் மனக் கடல்களில் ஓயாது எழும்பிக்கொண்டிருந்த துயர அலைகளும், வேதனை அலைகளும் சின அலைகளும் உண்டாக்கிய பேரிரைச்சல் அந்த அறையில் நிலவிக் கொண்டிருந்த அமைதியைக் கலைக்க முடியாத தொன்றாக இருந்தது!

பரிவின்பனும் உதயனும், அந்த அறையின் சுவர்களை அலங்கரித்துக் கொண்டிருந்த—அற்புதத்தையும், ஆச்சரியத்தையும் அள்ளி வீசிக்கொண்டிருந்த அந்த அழகோவியங்களை வைத்த கண்களை வாங்காமல் பார்த்தபடியே நின்றனர். அந்த ஓவியங்கள் கூறிய ஓவச் செய்தி அவர்கள் உருவத்திலே ஓவச் செய்தியை யுண்டாக்கி அதைக் கொள்ளைத் தலைவனுக்குக் காட்டியது! மூவர் கண்களும் அந்த இனிய சித்திரங்களையே பார்த்துக் கொண்டிருந்தன. அப்படி வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களுக்குத் தங்களை வெகு நேரம் காட்டக்கூடாதென்று அந்த ஓவியங்கள் எண்ணினவோ என்னவோ, அவர்கள் கண்களுக்குக் கண்ணீர்த்திரை யிட்டன அவை! கொழு கொழுவென்று தங்கச்சிலையைப் போலிருக்கும் அழகான குழந்தையொன்று தன் தாயை இழந்துவிட்டு, விஷயமேதும் தெரியாமல் தன் பற்களற்ற வாயைத் திறந்து இனிய சிரிப்பைக் கக்குவதைப் பார்க்கும்போது அதைப் பார்ப்பவர்களுக்கு எவ்வளவு பரிதாபமேற்பட்டு அவர்கள் கண்களிலே நீர் தளும்புமோ அதைப் போலவேதான் அவர்கள் கண்களிலும் கண்ணீர் கசிந்தது!

"பரிவின்பரே, இன்பதாசரை நீர் சந்தித்தீரா? எங்கே?....முல்லையிலா? எப்பொழுது?"

எழிலோவியங்களை, கண்ணீர்த் திரையை யூடுருவிப்பார்த்துக் கொண்டிருந்த பரிவின்பனின் பார்வையையும், எங்கெங்கோ ஓடி அலைந்து கொண்டிருந்த சிந்தனையையும் தன்பால் இழுத்தன, கொள்ளையர் தலைவனின் இந்தச் சொற்கள்.

"ஆம், நாங்கள் அவரைச் சந்தித்தோம். முல்லையிலல்ல. இன்று பிற்பகல் நெய்தல் நாட்டின் எல்லைப் புறத்திலே அந்த ஒப்பற்ற கலைஞரை நாங்கள் கண்டோம். அளவிவாவினோம். பின்னர் அவர் எங்களுக்குத் தம்முடைய சோக வரலாறு முழுவதையும் மிகவும் விளக்கமாக, உணர்ச்சி ததும்ப, கண்ணீரோடு கூறினார்" என்று பதில் கூறினான் பரிவின்பன்.

"முல்லையிலிருந்து அவர் திரும்பிவிட்டாரா? திரும்பியதும் நேராக என்னிடம் வருவதாக வல்லவா அவர் கூறிச் சென்றார்! முல்லை மன்னரிடம்

அவர் பேச்சுவார்த்தைகள் நடத்தினாராமா?' வியப்பிலே தோய்த்தெடுத்த இந்தச் சொற்களைப் படபடவென்று வீசினான் கொள்ளையர் தலைவன்.

"முல்லை மன்னரோடு அவர் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்; ஆனால் அவன் அவரை மதிக்கவில்லை. தன் தகப்பனாரின் ஆத்ம நண்பனென்றும், வயதில் முதிர்ந்தவரென்றும் அவரைப் பாராது அவரைச் சாட்டையால் கையப்புடைத்து விட்டானாம் அச்சண்டாளன்!"

பரிவின்பன் தன் பேச்சை முடிக்கக்கூடவில்லை. அதற்குள்,

"ஆ! என்ன அக்கிரமம்! கலையரசரை அக்கயவன் சாட்டையால் அடித்தானா? மானமுள்ள மனிதனா அவன்? பூசரனின் புத்திமதி அவனை அந்த அளவிற்கு அயோக்கியனாக்கியிருக்கிறது! புலி வயிற்றில் பிறந்த பூனை அப்பயன்!" என்று ஆவேசத்தோடு கொக்கரித்தான் கொள்ளையன்! அந்தப் பேச்சு பரிவின்பனுக்கும் உதயனுக்கும் மெய்ச் சிலிர்ப்பைத் தந்தது. மீண்டும் சிறிது நேரம் அமைதி.

"நண்பரே, இப்பொழுது அவர் செய்தல் நாடு சென்றிருக்கிறார். ஆம். எங்கள் நாட்டிலே உள்ள ஒரு இளம் ஓவியரும் அவர் தாயாரும் முறையே நம் கலையரசரின் மகனாகவும் மனைவியாகவும் இருக்கவேண்டுமென்று எனக்குத்தோன்றியது. அதை அவரிடம் கூறினேன். ஏற்கெனவே செய்தல் சென்று கொண்டிருந்த அவர் ஆவலோடு சென்றுள்ளார்!"

வேதனையும் கோபமும் சேர்ந்து கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த கொள்ளைக்காரன் மனதிலே அந்தத் தீயை அணைக்கும் வகையில், மகிழ்ச்சி தாக்கூறிய இந்தச் சொற்களை வீசினான் பரிவின்பன்.

"அவருடைய மனைவியும் மகனுமா?...ஏன் இருக்கக்கூடாது? அப்படியிருந்தால் எப்பொழுதோ அவரிடமிருந்து தன் தொடர்பையறுத்துக் கொண்டு சென்றுவிட்ட அந்த மகிழ்ச்சி மீண்டும் அவரிடம் உறவு கொண்டாடலாம்! கலையரசரை மகிழ்ச்சிக் குளத்தில் நீந்தும் போது பார்க்கவேண்டும்—அப்படி அவரை அக்குளத்தில் நீந்த வைக்க வேண்டுமென்பது தான் என்னுடைய நீங்காத ஆசைக்கனவு! அது நிறைவேறக் கூடிய சந்தர்ப்பமும் வாய்த்திருக்கிறதே! பார்ப்போம்."

வியப்பு ஊட்டிய மகிழ்ச்சியினால் அக் கொள்ளைக்காரனின் அதரங்கள் பட படவென அசைந்தன. அன்பொழுக, ஆவலும் ஆர்வமும் தொனிக்கப் பேசினான்.

சிந்தனையில் அவன் மூழ்கிய தன் விளைவாகச் சிறிது நேர அமைதி! திடீரென்று அவனுடைய "கணீர்" குரல் அமைதியைக் கலைத்தது.

"நண்பரே, இன்பதாசர் உம்மிடம் தம் வரலாறு பூராவையும் கூறினாரல்லவா? அப்படியானால் என்னைப் பற்றியும் கூறியிருப்பாரே!"

'இல்லை நண்பரே, அவர் உம்மைப்பற்றி ஏதும் சொல்லவில்லையே! வேறு ஒரு வீரனின் பெயரைத்தான் குறிப்பிட்டு, அவனை நான் சந்திக்க நேரிடும் என்று கூறினார்!"

"அந்த வீரனின் பெயர்?"

"கோமள வர்மன்!"

கொள்ளைத் தலைவனின் கண்களிலே ஒளிவீசியது! மகிழ்ச்சிக் கீறல்கள் அழுத்தமாக அவன் முகத்திலே காட்சி தந்தன. அவன் அதரங்களுக்கிடையே புன்னகை அரும்பியது.

"நண்பரே, அந்தக் கோமள வர்மனைப்பற்றி வேறேதும் அவர் சொல்லவில்லையா?"

"அவன் ஒரு பெருவீரனென்றும், பாலைநாட்டில் மக்களாட்சி நிலவப் புரட்சி செய்து வருகிறானென்றும் அவனிடமிருந்து நான் அறிந்து கொள்ள வேண்டியவை சில உள்ளன என்றும் அவர் கூறினார்."

"அப்படியா?.... ....பாலையின் பாதாளச் சிறையிலிருந்து தான் தப்பி வெளியே வந்ததைப் பற்றி அவர் ஏதும் கூறவில்லையா?"

பாலைச் சிறையிலிருந்து தப்பி முல்லைக்குச் சென்றதாகக் கூறினாரே தவிர வேறேதும் அதைப் பற்றி விளக்கமாகச் சொல்லவில்லை." என்றான் பரிவின்பன்.

"அப்படியானால் நான் அதைப்பற்றி உமக்கு விளக்கமாகச் சொல்கிறேன். இதோ இப்படி இந்த இருக்கைகளில் அமருங்கள்."

மூவரும் ஆசனங்களிலமர்ந்தார்கள். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு,

"நண்பரே, நீர் இன்று உம் கரங்களில் பூட்டப்பட்ட பெரிய இரும்புச் சங்கிலியைத் தகர்த்தெறிந்தது, ஒரு வேலின் உதவியால்தானே?" என்றான் அக்கொள்ளைத் தலைவன்.

"ஆமாம், நண்பரே." என்றான் பரிவின்பன்.

"அது உமக்கு எப்படிக் கிடைத்தது?"

"நமது ஓவியர் திலகம் எனக்களித்ததுதான் அது!"

"ஆ! இன்பதாசரின் தொடையிலே பொறுத்தப்பட்ட வேலா அது? நண்பரே, நீர் எதற்காக அதை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டீர்? மறுத்திருக்கக் கூடாதா? இனி அவருக்கு எவ்வித ஆபத்தும் நிகழலாமே!" உணர்ச்சியோடு பேசினான்.

(14-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் ரோமன் ரோலந்து குறிப்பிட்டபோது, "மிகுந்த அச்சம், நெஞ்சுறுதியின்மை, எளிதில் தீயவழக்கங்கட்கு இரையாகும் போக்கு, எப்பொழுதும் கனவுலகிலேயே அலைந்துகொண்டிருக்கும் உள்ளம், குறிப்பிட்ட நோக்கமின்றி கால்சென்ற வழியெல்லாம் நடந்து அலையும் தன்மை, சோம்பல், மறதி...எதிர்காலத்தைப்பற்றிய கவலையின்மை, காதற்கனவு, சுறுசுறுப்பற்ற அமைதி'...என்றெல்லாம் கூறி ரூசோவின் வாலிப வாழ்வை விளக்கிவைக்கிறார்.

அந்த ரூசோதான் வாலிப மெருகு தேயத்தேய புது மனிதனாக உருவெடுத்தான். எண்ணங்களைக் காலத்தோடு ஒட்டிப் பழகத் துவங்கினான். அவனது சிந்தனை உண்மை நிலைகளோடு ஒட்டிக்கொண்டன. பாரிலே அவன் கண்டு கேட்ட உண்மை நிகழ்ச்சிகளை .... தயங்காது கூறிட முன்வந்தான். அந்த உண்மைகளை உலகைப்பார்த்து வெள்ளை உள்ளத்தோடு வெளியிட்ட பின்னர்தான் உண்மையின் படப்பிடிப்புக்கும் எதிர்ப்பு உண்டு என்பதை ரூசோ புரிந்துகொண்டான்! விநோதக் கூடமாகியிருந்த அவனது உள்ளம் எதிர்ப்பையும் தாங்கிக்கொண்டு நாட்டுநிலைபற்றி பேச ஆரம்பித்தது! நாளடைவிலே அவனது விநோதமும் வேடிக்கையும் அவன் முன்னேயிருந்து மறைந்துகொண்டன. கடமை அவன் முன்னே விரிய ஆரம்பித்தது. திருத்தப்படாத காடாகிக் கிடக்கும் நாட்டை திருத்திவிடுவதென முயன்றான். அதுதான் அவனது இலட்சியப்பாதையாகியது.

ரூசோவின் சிந்தனையின் முடிவு கருத்துக்களை வெளியே விடத் துடித்துக்கொண்டிருந்தது. அவனது புதிய கருத்துக்களை எழுத்துக்களாகத் தொகுத்துவைக்கத் துவங்கினான். அந்த எழுத்தோவியங்களை 'டிசான் கலைக்கழகம் (Academy of Dijon) என்ற பெயரிலே அப்போது அமைந்திருந்த கலைக் கழகத்துக்கு ரூசோ அனுப்பிவைத்தான். அந்த எழுத்தோவியங்களைக் கலைக்கழகத்தாரும் மகிழ்ச்சியோடு ஏற்றுப்புத்தக வடிவிலே வெளிக்கொணர்ந்தார்கள். அதைத் தொடர்ந்த கழகத்துக்கு புதிய கருத்துக்களை வடித்துத் தந்து...அவைகளெல்லாம் புத்தம்புதிய புத்தகங்களாக வெளியிடச் செய்தான். ஏட்டிலே ரூசோவின் எண்ணங்கள் முதல் முதலாகக் கொட்ட ஆரம்பித்தன. அந்த எண்ணங்களின் சூழ்நிலை ஆதிக்கவாதிகளை அப்போதுதான் கனல் கக்கவைத்தது! அவனின் ஏடுகள் பரவப்பரவ கனல்கக்கிகளின் ஆவேசமும் வளர ஆரம்பித்தது! ரூசோவின் எழுச்சி எழுத்துக்களால் விழிப்புற்றவர்கள் மலர்ச்சோலை வண்டுகளாகிய ரூசோவைத் தொடர்ந்து நடந்தனர்.

கால வேகத்திலே எதிர்ப்பு சக்திகளின் தாக்குதல்களைத் தாங்கிக்கொண்டு 37-வது வயதைத்தாண்டி நடந்து கொண்டிருந்தான். இதற்கும் பின்னர் வளர்ந்த காலம் தான் அந்த இலட்சிய வாதியை வேதனைக் கூடத்திலே தள்ளிக் கொண்டிருந்தது. அடக்குமுறை ரூசோவை நோக்கி வேகமாகப் பாய்ந்து வரத் துவங்கியது. அவன் ஏழை. எனவே பசியோடு வேறு போர் தொடுக்க வேண்டியவனாகி யிருந்தான்... இலட்சியப்போர் புரிவதோடு! ஆதிபத்தியத்தின் அடக்குமுறை கோரமாகி யிருக்கவே ரூசோ தனது அன்புக்குரிய உயிர் நண்பர்களென்று யாராரை நம்பி யிருந்தானோ அவர்களெல்லாம் நழுவ ஆரம்பித்தார்கள். ஆதரவற்ற நிலை உலுக்கிய அவனைக் கொடிய நீர்நோய் வேறு வாட்டியெ

இலட்சியமுழக்கத்தை இதயத்திலே தாங்கிய அந்தச்செயல்வீரன் ஏடும் எழுதுகோலுமாகி புதுமைக் கருத்துக்களை வடிக்கும் நிம்மதியான இரவு நேரங்களிலே அந்தக் கொடு நோய் அதன் உச்சநிலையிலே லீலை புரிவதுண்டு. உள்ளத்தைச் சுக்குநூறாக்கும் அந்த வேதனை வேளையிலும் கண்ணீரை வடித்துக்கொண்டே இலட்சிய வெற்றியின் இன்பக் கனவிலே எண்ணத்தைப் பாயவிட்டு வேதனையைச் சகித்துக் கொள்வான் அவன்.

மன வேதனையையும்; நோய் வேதனையையும் ஓரளவுக்கு சகித்துக்கொண்டான். ஆனால், இயற்கை நடத்திய வறுமைப்போரை அவனால் சமாளிக்கமுடியாமலே போய்விட்டது. அந்த வறுமைக்-கொடுமையிலிருந்து விடுபட்டுக்கொள்ள "எமைல்" "சமுதாய ஒப்பந்தம்" என்ற எழில் தரும் இரு ஏடுகளையும் தீட்டி மக்கள் மன்றத்திலே பரப்பினான். புத்தக விற்பனையிலே கிடைக்கக்கூடிய சிறு தொகை தனது வறுமைப் போரைத் தடுத்து நிறுத்துமென ரூசோ பெரிதும் விரும்பிய காரணத்தாலேயே இந்த முயற்சியிலே இறங்கினான்.

அந்த முயற்சி-ரூசோவின் எண்ணக் கனவு—சரிந்த கோட்டையாகியது. அவனின் எண்ணம் சிதைந்தது மட்டுமல்ல, அந்த எண்ண அலையை மக்கட் கடலிடையே மோதவைக்க நடைமுறையில் உதவிய அந்தத் தீஞ்சுவை ஏடுகள்—எமைல், சமுதாய ஒப்பந்தம்,—என்ற இரண்டு நூல்களுமே நாட்டிலே நடமாடக்கூடாதென பிரெஞ்சுப் பாராளுமன்றத்தினர் சட்டத்தின் மூலமாக ரூசோவைக் கொட்டினர். அந்த ஏடுகள் இனி உலவவிடக்கூடாது என்றுமட்டும் சட்டத்திலே கூறவில்லை. அந்த ஏடுகள் எங்கெங்குமில்லாதபடி அவற்றையெல்லாம் தேடிப் பிடித்தெடுத்துத் தீயினால் கொளுத்திட வேண்டுமென்று விளக்கமும் கூறினர். ஏடுகள் அரசாங்க சட்டப்படி தீயிட்டு கொளுத்தப்பட்டன! ஆமாம்! எமைல, சமுதாய ஒப்பந்தம் என்ற இரண்டு ஏடுகள்தான்...இரவுபகல் பாராது, கொடுமை தந்த சிறு நீர் நோயையும் லட்சியம் செய்யாது, நாட்டு நலனிலே நாட்டங்கொண்டு எண்ணங்களை ஏட்டு வடிவிலே தந்திருந்த அந்த இரண்டு ஏடுகள் இன்

றைய மனித இனத்திற்கு இன்றியமைந்திடாத பொன் மொழிகள் என்று அறிஞருலகால் கருதிடப்படுகிறதோ அதே ஏடுகள்தான் தீயோடு வைத்து கொளுத்தப் பட்டன ஆணவ ஆட்சியாளரால்! பாதிரிகளும் பாராளு மன்றத்தாரும் ஏடுகள் புகைந்து சாம்பலாகியதைக் கண்டு புன்சிரிப்பெய்தியதோடு இல்லாமல்......அது மாதிரியான கருத்தமைந்த ஏட்டைத்தீட்டிய குற்றத்திற்காகவும் இனி அது போன்று மாற்று ஏடுகள் தீட்டிடாதிருக்கவும் ரூசோவையே கைது செய்து சிறைக்கூடத்திலே தள்ளவும் உத்தரவுகள் பிறக்கலாயின! பாதிரிகளையும், பாராளு மன்றத்தினரையும் பாதந்தாங்கியிருந்த கூட்டத்தினர் பாரிசிலே ஒன்றாகத் திரண்டு பொது இடத்திலே ரூசோவின் கருத்துக் களஞ்சியங்களைக் கொளுத்தி மகிழ்ந்தனர். "ரூசோவின் ஏட்டைக் கொளுத்தியது தீரமான செயலல்ல...ரூசோவையே எரிக்கவேண்டும்"...என்று அந்தத் தீமூட்டிய திருவிழாவிலே சீமான்கள் கொக்கரித்தனர்.

பாரிசின் இதுமாதிரியான நிகழ்ச்சிக்குப்பின் ரூசோவுக்கு எதிர்காலமே புரியாத குருட்டு வழியாகக் காட்சிதந்தது. மறைமுகமாகப் பேசிக்கொண்டு உதவிவந்த ஓரிரு நண்பர்கள்கூட ரூசோவிடமிருந்த தொடர்பை அறுத்துக் கொண்டனர். பிரான்சிலே உலவுவதே அபாய அறிவிப்பாக அரசினர் கருதிவிட்டதை ரூசோ உணர்ந்து இரவுக்கு இரவே பிரான்சைவிட்டு சுவிட்ஜர்லாந்துக்கு ஓடினான்.

ரூசோ லட்சியவாதி. எனவே அவனது உள்ளத்திலே உலவிக்கொண்டிருந்த கருத்தை அவன் எங்கே இருந்தாலும் அவனால் மறைத்து வைக்க முடியவில்லை. சுவிட்சர்லாந்திலே அவன் தங்கியிருந்த காலத்திலே தன்னுள்ளத்திலே மூடிபோட்டு மறைத்து வைத்திருந்த இரகசியங்களை சிறுகச் சிறுக வெளியிடத் துவங்கினான். அந்த சிறு துளி நாளடைவிலே பலரிடமும் பரவி அரசினர் காதுக்கும் எட்டியது! சுவிட்சர்லாந்தும் பிரான்சாக மாறியது! ரூசோமீது அடக்குமுறையை ஏவி நாட்டைவிட்டுத் துரத்தியது! 1762 ஜூன் 18—லே. ஜெனிவா, பொன் போன்ற இடங்களிலே ரூசோவின் ஏடுகள் எரிக்கும் நிகழ்ச்சி பரவலாயிற்று. இந்த நிகழ்ச்சியை, "ஐரோப்பா முழுவதுமே என்னை எதிர்க்க ஒன்றாகத் திரண்டது"... என்று கூறி அவனின் அந்த வேதனைக் காலத்தை விளக்குகிறான் ரூசோ!

மாறுவேடத்திலே சுவிட்சர்லாந்தைவிட்டு வெளியேறிய ரூசோ பிரஷியாவிலே சிலகாலம் வாழ்ந்தான், அங்கும் எதிர்ப்பு வளரவே கால்சென்ற இடங்களெல்லாம் நிலையில்லாது ஓடி அலைந்தான். ஜெனிவாவில் தங்கியிருந்த சமயத்திலே ஆலயப் பாதிரிகளையும்—ஆட்சியாளரையும் தாக்கி கட்டுரைகள் தீட்டிய காரணத்தால் ஜெனிவா மக்கள் உட்பட ரூசோவை சுட்டுவிடுவதாக—பயமுறுத்தி நாட்டைவிட்டு வெளியேற்றினர். மீண்டும் சுவிட்சர்லாந்துக்குள் நுழைந்தான். அவன் வரவு சட்ட விரோதமெனக் கூறப்பட்டது. ரூசோவின் அறிவுத்—தெளிவுக்கு அந்த நேரத்திலே மதிப்புத் தந்த ஆங்கில வரலாற்றாசிரியர் டேவிட் ஹியூம் (David Hume) இங்கிலாந்துக்கு வருகை தரும்படி அவனை அழைத்தார். அந்த அன்பழைப்பை ஏற்றுக் கொண்டு இங்கிலாந்துக்கு ஓடோடிச் சென்றான். அங்கும் அவனது மனநிலை அமைதிப் படவில்லை. பிரான்சுக்கே திரும்பவும் ஓடிவந்தான். ரூசோவைக் கைது செய்யும் சட்டம் அப்போதும் அமுலிலிருந்தது. எனவே மாறுவேடத்திலே பெயரையும் மாற்றிக் கொண்டு பிரெஞ்சிலே உலவினான். அவனது ஜீவலட்சியம் நடைமுறையாகாமலிருப்பதைக் கண்டு துடிதுடித்தான். அந்த உள்ளத் துடிப்பை நாளடைவிலே அடக்க முடியாதவனாகி ரூசோ "நீதியையும் நேர்மையையும் விரும்பும்—பிரெஞ்சு மக்களுக்கு"...என்ற தலைப்பிலே துண்டு வெளியீடு வெளியிட்டு தனது மன நிலையை மீண்டும் சிறுகச் சிறுக வெளியிடத் துவங்கினான்.

ரூசோவின் 66-வது வயதிலே மரணத்தைத் தழுவிக்கொண்டான். அவன் வாழ்வு நடத்திய வேதனை நாடகத்தை முடித்துவிட்டு சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு அவனது ஏடுகளை அன்புப் பரிசல்களாக விட்டுவிட்டுச் சென்றான்.

———

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

படிப்பட்ட முக்கியமான நேரத்தில்தான் மாநில மாநாடு கூடுகிறது.

மாநாடு கூடுகிற நேரமும் முக்கியமானது — மாநாட்டைக் கூட்டுகின்ற கட்சியும் மகத்தானது. எனவேதான், நாட்டு மக்களின் கண்களும் கருத்தும், அடுத்து நடைபெறவிருக்கிற பொதுத் தேர்தலைக்கூட ஓரளவு மறந்துவிட்டு நம் மாநாட்டின் திசைநோக்கியே தங்களின் பார்வையைச் செலுத்தியிருக்கின்றன.

தென்னாட்டின் அரசியல் வரலாற்றிலேயே ஒரு முக்கியமான கட்டம், ஒரு சிறந்த பகுதி, ஒரு பொன்னேடு, நம் மாநில மாநாடு. இது, நாம் கூறுவது அல்ல, எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் கூற இருப்பது.

இத்தகு சிறப்பும் முதன்மையும் வாய்ந்த வரலாற்று நிகழ்ச்சியில் பங்குபெற வேண்டியது ஜனநாயகவாதிகள் அத்தனைபேருடைய உரிமை மட்டுமல்ல, கடமையுமாகும்.

ஆகவேதான், மக்களாட்சிக்கோட்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை படைத்த அத்தனை பேரையும் அன்புடன் அழைக்கிறோம், வாரீர்-வாரீர்-என்று.

வாரீர் தோழர்களே, மாநில மாநாட்டில் கலந்து கொள்ள வாரீர், மக்கள் சக்தியின் மகத்தான ஆற்றலை ஆதிக்க வாதிகளுக்கு அறிவிக்க வாரீர், வட நாட்டின் பிணைப்பிலிருந்து தென்னாட்டை விடுவிப்பதற்கான முயற்சியின் வல்லமையை டில்லிபுரிக்குத் தெரிவிக்கத்

(5-ம் பக்கம் பார்க்க)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

"இனி அவருக்கு ஆபத்து நிகழ முடியுமா? நண்பரே, அவர் அந்த வேவை என் தொடையில் பொறுத்திக்கட்டும் வரையில் எனக்கு அதன் மகிமை உண்மையிலேயே தெரியாது! தெரிந்திருந்தால்— அதோடு அது அவருக்கு இன்றியமையாதது என்பதும் தெரிந்திருந்தால் அந்த உத்தமரிடமிருந்து அதை நான் வாங்கியிருப்பேனா? நண்பரே, நான் சுயநலவாதியல்ல!"

"இல்லையில்லை. நான் உம்மைச் சுயநலவாதியென்று கூறவில்லை! நீர் அப்படி அர்த்தம் செய்துகொள்ள வேண்டாம்... நாளை நெய்தலுக்கு எனது ஆட்கள் இருவரையனுப்பி அவரை இங்கு அழைத்துவரச் செய்கிறேன். அவருடைய மனைவியும் மகனும் அங்கிருந்தால் அவர்களையும் இங்கு அழைத்து வருமாறு செய்கிறேன்....நண்பரே, அவர் எதற்காக இந்த வேவை உம்மிடம் தந்துள்ளாரென்பது உமக்குத்தெரியுமா? என்னைப் போன்ற கொள்ளையரிடமிருந்து தப்புவதற்காக அல்லவே அல்ல!...ஆமாம். நீர் பாலை செல்கிறீரென்பதை யறிந்ததும் அவர் கண் முன்பு பூசரப்புல்லன் பாஷாணபூபதியும், பயங்கரச் சிறையும் காட்சியளித்திருக்கின்றன. எனவேதான் இதை உம்மிடம் அவர் தந்திருக்கிறார்!"

"ஆமாம் நண்பரே! அவர் பலமுறை 'ஜாக்கிரதையாக இருந்துகொள்' என்று கூறினார்!"

மீண்டும் சிறிது நேர அமைதி!

"நண்பரே, இன்பதாசர் உம்மிடம் விளக்கமாகச் சொல்லாமல்விட்ட ஒன்றை உமக்கு விரிவாகச் சொல்கிறேன், கேட்டுக் கொள்ளும்."

அவன் ஆரம்பித்தான். தொடர்ந்தான்:

"நண்பரே, இன்பதாசர் சிறையிலிருந்து தப்பிச் சென்ற விதத்தைக் கூறுவதற்கு முன்னால், கூறவேண்டியவைகளாக உள்ள சிலவற்றைக் கூறுகிறேன். பொறுமையுடன் கேளும்!

"ஆமாம். இன்பதாசரைப் பற்றி நான் முதன்முதல் கேள்விப்பட்டதிலிருந்து சொல்கிறேன்......அப்பொழுது நான் ஐந்துவயது சிறுவன். துள்ளி விளையாடித் திரியும் பள்ளிப்பருவத்திலே இருந்தேன். என் தந்தை பாலைநாட்டின் படைத்தளபதியாக இருந்தவர். பரந்தாமனார் பாலையின் மன்னராக இருந்த அந்த நாட்களிலே அவர் மிகவும் பெருமையும் புகழும் பெற்று விளங்கினார். பாலை முழுவதுமே என் தந்தைக்கு ஒரு தனி மதிப்பு தந்துவந்தது. செல்வாக்குடன் இருந்தார் அவர். அவர், நான் ஆறு வயது சிறுவனாயிருந்த பொழுதே இறந்துவிட்டார்! நண்பரே, அவர் பிழைத்திருந்தால் இன்றைய பூபதியின் ஆட்சியிலுங்கூட நாட்டின் முதல்தளபதியாக இருந்திருக்கலாம். ஏன்? அவருக்குக் கீழ் இருந்து படையிலே தொண்டாற்றியவர்களெல்லாம் இன்று பூபதியின் தளபதிகளாக இருக்கிறார்கள். ஆனால் அவர் சோரம்போன பிண்டமல்ல! மானமிழந்த மனிதரல்ல! மானமும் மதிப்பும் தான் அவர் மதித்தவையே தவிர பணமும் பதவியுமல்ல! அநீதி அவரை அணுகவே முடியாது! நீதியும் உண்மையுமே அவர் அன்புள்ளத்தை எப்பொழுதும் அலங்கரித்துக் கொண்டிருந்த ஆபரணங்கள். அத்தகைய உத்தமர், உன்மத்தர்களின் கீழிருந்து அவர்கள் பிறப்பிக்கும் ஆணை ஆணைகளை ஏற்று வேலை செய்வாரா? துரோகியின் ஆட்சிப் பீடத்திலே அவர் ஒரு அங்கத்தினராக இருக்க விரும்புவாரா? எனவேதான் அவர் ஆதிக்கவாதிகளின் ஆட்சியை எதிர்த்து, ஒரு கழகத்தை ஏற்படுத்திக்கொண்டு புரட்சி செய்தார். மக்களின் சார்பிலே அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி அவர் கேட்கவில்லை. "துரோகியே, சிம்மாதனத்தைவிட்டு இறங்கு! ஆதிக்கவாதியே உடனே வெளியேறு! உன் அழிவுக்காலம் நெருங்குகிறது!" என்று வேதனை முழக்கம் எழுப்பினார் பாலை மக்களிடையே ஒரு சலசலப்பை யுண்டாக்கினார். உறக்கத்திலிருந்த மக்களைத் தட்டியெழுப்புகின்றன அவர் தம் முழக்கம் என்பதை யறிந்துவிட்டான் ஆரிய ஆதிக்கவாதி!

"தன் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்கின்றவர்களை அடங்கி ஒடுங்குமாறு செய்ய அவன் கையாண்ட வழிகள் இரண்டு. பலம் பொருந்தியவர்களிடமிருந்துப், பெருமையும் வீரமும் கொண்டவர்களிடமிருந்தும் எதிர்ப்பு வந்தால் அவர்களை நேரிடையாக எதிர்ப்பது கிடையாது! தொடுக்கப்படும் ஆற்றல் பாணத்திற்குப் பதில் புன்சிரிப்பு! நட்புகோரும் மடல்கள்! இவைகளைத்தான் அவன் அவர்களுக்குப் பதிலாகத் தருவான்—பலமில்லாதவர்களிடமிருந்து கிளம்பும் வேதனைக் குரலுக்கும் உரிமை முழக்கத்திற்கும் அவன் தரும் பதில் வெஞ்சிறை! சித்திரவதை! தூக்குமேடை! இந்த இருவழிகளுள் முதல் வழியைக் கையாண்டு பார்த்தான் பூசரன். என் தந்தை, சிறு இரும்புக் கம்பிக்கு அசையாத பெருங் கற்பாறை

என்பதை உணர்ந்துகொண்டான். அவரை அடக்கினால்தான் தன் ஆட்சி நிலைக்கமுடியுமென்பதையும் நன்கறிந்துவிட்டான். இந்த நிலையில், என் தந்தை, அவனுக்கு, தான், புரட்சி செய்யப்போவதாகவும், ஒரு வாரகால தவணைக்குள் ஆட்சியை விட்டுச்சென்றால் அது நிறுத்தப்படும் என்றும் ஒரு மடல் அனுப்பினார். பூசுரனின் குலை நடுங்கத்தான் செய்தது. அவனைப் புடைசூழ்ந்திருந்த பிண்டங்கள், 'நம்மால் இந்தக் கும்பலையடக்க முடியாதா?' என்று கேள்வியெழுப்பி, 'நிச்சயமாக முடியும்!'' என்று உறுதிக்கு வந்து, என் தந்தையை, அவர்தம் கூட்டத்தோடு புரட்சிசெய்ய வைத்தான்.

''புரட்சி பயங்கரமாக இரண்டு மூன்று நாட்கள் நடந்தன. அரண்மனையைச் சுற்றிலும் இனப்பற்று மிகுந்த வீரர்கள் சூழ்ந்து புரட்சி செய்தனர். அறிவியக்க வீரர்களின் உரிமைக் குரலுக்கு, ஆதிக்க வாதியின் அடிவருடிகளின் அம்புகள் பதில் கூறின, பிறகு தான் பயங்கர உள்நாட்டுப் போர்! ஆயிரக் கணக்கானவர் உயிர்விட்டார்கள்.

''நண்பர்களே, வீரர்கள் பலர் இறந்துவிட்ட நிலையில்-கோழைகள் பலர் பின் வாங்கிவிட்ட சமயத்தில் — விபீடணர்களின் வீரப்பிரதாபம் நடக்கும் தறுவாயில் தான் என் தந்தை முன் வைத்த காலைப் பின்வைக்காது, மனத் தளர்ச்சியடையாமல், இலட்சியத்தை மாற்றிக் கொள்ளாமல், தன்னுடனிருந்த சில தன்மானப்புரட்சி வீரர்களோடு புரட்சியைத்தொடர்ந்து நடத்தி வந்தார்! கடைசியில் அவர் ஆதிக்கவாதிகளால் பிடிக்கப்பட்டு விட்டார், கடுஞ்சிறையிலே வைத்து, குருதி கசிய கசையடிபட்டார் அக் கரும வீரர்! அதையடுத்து தூக்கு மேடை ஏறினார்!

''நண்பரே, அந்தக் காட்சி இப்பொழுதும் என் மனதில் நீங்காமலிருக்கிறது!... உயர்ந்த தூக்குமேடை! என் தந்தையின் கழுத்தை இறுக்கி நெறுக்கி அவர் உயிரைக் குடிக்கக் காத்துக் கொண்டிருந்த கயிறு தொங்கி கொண்டிருக்கிறது! ஆயிரக் கணக்கான மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கண்களிலே நீர் கசியத்தான் செய்தது! அவர்கள் மனதிலே வேதனை ஏற்படச் செய்தது! ஆனால் அந்த உணர்ச்சிகளின் வயத்திலுங்கூட அவர்கள் செயலாற்ற முடியாதவர்களாக-அதற்குப் பயந்தவர்களாக—உயிரை வெல்லமாகக் கருதியவர்களாக நின்று கொண்டிருக்கிறார்கள்! அழுது அழுது இமைவீங்கி, கன்னங்களிலே கண்ணீர்வடிந்து, உறைந்த வடுக்களோடு என் தாயார் நிற்கவும் சக்தியில்லாமல், தன் தோழியர்கள்மீது சாய்ந்து கொண்டு, அந்த நிலையிலும் தன் வரண்ட தொண்டையிலிருந்து வேதனைக்குரலை எழுப்புகிறாள்! மார்பிலும் தலையிலும் அடித்துக் கொள்கின்றன அவள்கைகள். நான் அதுவரை என்றுமே என் அன்னையை அந்த நிலையிலே பார்த்தது கிடையாது! என் இளமனதிலே பெருங்குழப்பம் உண்டாயிற்று! தூக்குமேடையிலே நிற்கும் என் தந்தையையும் என்னைத் தன் வலது கரத்தால் இறுகப் பிடித்துக்கொண்டு கதறும் என் அன்னையையும் மாற்றி மாற்றிப் பார்த்தேன். என் கண்களிலும் கண்ணீர் கலங்கியது! 'என்னம்மா? என்ன?' என்றேன், 'உன் அப்பாவை நீ இனிமேல் பார்க்க முடியாதுடா கண்ணே! அவரை இனிமேல் இந்த நாடே பார்க்கமுடியாதுடா கண்ணே!' என்றாள்.

'அப்பா!' என்று என் இளங்குரல் அங்கு நிலவிக்கொண்டிருந்த சலசலப்புச் சத்தத்தைப் பிளந்துசென்று, தூக்குமேடையிலே நின்று கொண்டிருந்த என் தந்தையின் காதிலே பாய்ந்து சென்று அவரைத் தன் முகத்தைத் திருப்பி என்னைப் பார்க்கச் செய்தது! 'என் கண்ணே!' என்றார். அந்தக் குரல் இன்னும் என் காதுகளிலே ஒலிக்கிறது பரிவின்பரே!

'நண்பரே, அங்குப் பாஷாண பூபதி தன் பரிவாரங்களுடன் வந்தான், 'உன்னுடைய கடைசி விண்ணப்பம்?'—என் தந்தையைக் கேட்டான் ஆதிக்க வாதியின் படைத்தளபதி. 'மக்களுக்கு ஒரு சொற்பொழிவாற்ற வாய்ப்பு தருமாறு கேட்டான்!' என்றார் அசட்டைச் சிரிப்புடன் பாஷாணன். இது என் தந்தையின் காதிலே விழுந்து விட்டது. 'பாஷாணபூபதியே நீ நினைக்கிறபடி நான் பாலை மக்களுக்கு என் பேச்சை வீச விரும்பவில்லை. அவர்கள் ஆயிரம் முறை என் பேச்சைக் கேட்டிருக்கிறார்கள்! உணர்ச்சியூட்டும் வகையில், வேதனைக் குரலை எழுப்பியிருக்கிறேன். அது ஒரு சிலரைத்தான் இனப்பற்றுக்கொண்டு உரிமைப் போரிடச் செய்தது. விபீடணர்களாகவும், தொடை நடுங்கிகளாகவுமுள்ளவர்களுக்கு மீண்டுமொருமுறை நான் பேசவிரும்பவில்லை! என் அருமை மகன் கோமளவர்மனை ஒரு முறை முத்தமிட விரும்புகிறேன்' என்றார்....

அவன் கூறி முடிக்கவில்லை. பரிவின்பன் வியப்பு மிகுதியோடு,

''என்ன, என்ன பெயர் சொன்னீர், கோமளவர்மனா? நீர்தானா அந்தப் பெரும்வீரன்?'' என்று கேட்டான்.

''ஆம். நண்பரே!'' என்றான் இளநகைப்போடு கோமளவர்மன். (தொடரும்)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திராவிடர் டைரி—1952

திராவிடர் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு

ஒவ்வொரு தி. மு. க தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு.

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய எழில்மிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்!

சென்ற ஆண்டுபோல கிடைக்கவில்லையே என்று பிறகு வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

அறிஞர் அண்ணாதுரையின் சென்ற 15 ஆண்டு காலப் பேச்சு, எழுத்து ஆகியவற்றிலிருந்து அரிதின் முயன்று திரட்டப்பட்ட அரிய பொன்மொழிகள் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் 365—இவை, சென்ற இரண்டு ஆண்டு டைரிகளிலும் வெளிவராதவை, புதியவை, சிறந்தவை.

* தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாவின் புதிய புகைப்படம்.
* தி. மு. க. மாநிலமாநாட்டின் திறப்பாளர் நீலமேகம், கண்காட்சித் திறப்பாளர் சிற்றரசு, விளம்பரச் செயலாளர் கருணாநிதி, செயலாளர்கள் மணிமொழியார்—மனோகரன், வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன் ஆகியோரின் படங்கள்.
* தி. மு. க. கொடி, இரு நிறத்தில்
* மதுரைப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட கழகச் சட்டதிட்டத்தின் சுருக்கம்.
* கழக மாளிகையின்— புகைப்படம்.
* தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக் குழுக்களின் விவரங்கள், உறுப்பினர் பெயர்கள்
* தி.மு.க, கிளைகள் 650ன் விவரங்கள், அவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர் பெயர்கள்—மாவட்ட வாரியாக
* மாவட்டக் கழகங்களின் விவரம்
* தி.மு. மாணவர் கழகவிவரங்கள், செயல் உறுப்பினர் பெயர்கள்.
* திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள் !
* அரசினர் விடுமுறை நாட்கள்
* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனைவரி வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள் மற்றும்பல இன்றியமையாத குறிப்புகள்.

அழகான அமைப்பு 550 பக்கங்கள் விலை ரூ. 1-0-0

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ, 1—2—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—6—0-ம் அனுப்பவேண்டும்,

விற்பனையாளர் கழிவு 20% அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

மாநில மாநாட்டில், டைரி, விற்பனைக்குக் கிடைக்கும்.

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு, சென்னை 1.

வெளிவந்துவிட்டன!

தேசியத் திருவுருவந்தனை திரைவைக்கும் திராவிடரியக்கப்பாடல் நூற்கள்

“ சங்கநாதம் ” “ நீங்கள் கேட்பவை ”

இசற்றியவர்:—இரா. சண்முகம்

விலை 2 அணா

வணிகர்க்கு 20 %. சதம் கழிவு. அனுப்பும் செலவு இனம், 50 பிரதிகளுக்குக் குறைந்து V. P. P. யில் அனுப்ப இயலாது

வெளியிடுவோர் ;—புலியரசு.

125, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

“ போர்வாள் ”

சந்தா விவரம்

★

ஓராண்டு	ரூ.	6	8	0
6 மாதம்	ரூ.	3	4	0

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு, சென்னை 1.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printer 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B. A. (Hons.)